# மெட்ரோ நிலையங்களில் இருசக்கர வாகனம் வாடகைக்கு எடுக்கலாம்

■ சென்னை

சென்னை மெட்ரோ ரயில்களில் பயணிகளின் எண்ணிக்கையை அதிகரிக்க பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. பல்வேறு இடங்களை இணைக்கும் வகையில் ஷேர் ஆட்டோ, சிறிய ரக வாகனங்கள், மினி பேருந்துகள் இயக்கப்படுகின்றன.

இந்த நிலையில், மெட்ரோ ரயில் நிலையத்தில் இருந்து, தாங்கள் விரும்பும் இடங்களுக்கு சென்றுவர வசதியாக மின்சாரத்தில் இயங்கும் இருசக்கர வாகனங்களை வாடகைக்கு விடும் முறை அறிமுகம் செய்யப்பட்டுள்ளது. முதல் கட்டமாக சென்னை கிண்டி, ஆலந்தூர் மெட்ரோ ரயில் நிலையங்களில் இந்த வசதி தொடங்கப்பட்டுள்ளது.

ஓட்டுநர் உரிமம், புகைப்படத்தை ஆன்லைனில் பதிவேற்றம் செய்து இந்த இருசக்கர வாகனத்தை பெற்றுக் கொள்ளலாம். ஒரு கி.மீ.க்கு கட்டணம் ரூ.4 என நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இந்த கட்டணத்தையும் ஆன்லைனிலேயே செலுத்தலாம். மக்களிடம் கிடைக்கும் வரவேற்பை பொருத்து, மற்ற ரயில் நிலையங்களிலும் இந்த வசதியை விரிவுபடுத்த திட்டமிட்டுள்ளது.